ஹாஸ்டலில் இருப்பவர்களுக்கு, அவர்களுக்குக் கொடுக்கக் வேண்டிய ஈவைக் கொடுக்கிறார்கள், மீதியை அவர்கள் கையி லிருந்து போட்டுக் கொள்ள வேண்டும்.

திரு. எஸ். முத்துலிங்கம் : இராணுவத்தில் வேலை பார்க்கிறவர் களுடைய பிள்ளைகளுக்கும் எக்ஸ்-சர்விஸ்மென்களின் பிள்ளை களுக்கும் தற்போது எந்த முறையில் ஸ்காலர்ஷிப் வழங்கப் படுகிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : மத்திய அரசினரிடமிருந்து ஆண்டுதோறும் வருகின்ற உபகாரச் சம்பளத் தொகை ஒரே சீராக வந்துகொண்டிருக்கிறதா ? அல்லது, மாணவர்களுடைய எண் ணிக்கைக்குத் தகுந்தாற்போல் ஆண்டுதோறும் கூட்டப்பட்டு வருகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : எப்பொழுதும் கிடைத்து வருகிற மாதிரி ஒரே அளவில்தான் கிடைத்து வருகிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : ஸ்காலர்ஷிப் என்னும்போது சம்பளம் கட்ட வேண்டியதில்லை என்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. ஆனால், 'ஸ்பெஷல் ஃபீஸ்' என்று சொல்லி, அதைக் கட்டினால் தான் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வோம் என்று சொல்லி சில காலேஜ்களில் வாங்கிவிடுகிறார்கள். ஸ்பெஷல் ஃபீசும் வாங்கக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : In colleges, students are exempted from tuition fees.

திரு. கி. இரா. சம்பந்தம் : இப்பொழுது பிற்பட்ட வகுப்பு மாணவர்களிடமிருந்து அதிகமாக ஸ்காலர்ஷிப்புக்கான மனுக்கள் வந்துகொண்டிருக்கிறபடியால், அந்த ஸ்காலர்ஷிப்புக்காக ஒதுக் கப்படும் நிதியை அதிகரிப்பது சம்பந்தமாக இப்பொழுது ஏதா வது யோசனை இருக்கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலும், வருஷா வருஷம் மனுக்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருகிறது. பின் தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் அரை கோடி ரூபாய் க்கு மேல் கொடுக்கிறார்கள். இருந்தாலும், மாணவர்கள் அதிக மாக வருவதைப் பார்த்து, நாமும் அதிகமாகத்தான் கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

"சென்னை செய்தி" பத்திரிகை

* *146* **கேள்வி.—திரு. செ. கோ. விசுவநாதன் :** கனம் செய்தித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னைச் செய்தி (**Madras Information**) இதழ் ஒன்று அச்சிடுவதற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

[14th August 1963

(இ) மாதம் ஒன்றுக்கு வெளியாகும் பிரதிகளின் எண்ணிக்கை என்ன ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) 65 புதிய காசுகள், சராசரியாக.

(இ) 5,383 பிரதிகள், சராசரியாக.

திரு. செ. கோ. விசுவநாதன் : சென்னைச் செய்தியில் சட்டசபை நிகழ்ச்சிகளையும் எதிர்க் கட்சி உறுப்பினர்களுடைய கருத்துக்களையும் வெளியிட அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. கோ. பூவராகன் : சட்டசபை நடவடிக்கைகளைத் தனியாக அச்சிடுகிறார்கள். 'சென்னைச் செய்தியில்' தனியாக இவற்றை அச்சிடுவதற்கு உத்தேசம் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : 5,000 பிரதிகளில் இலவசமாக எத்தனை பிரதிகள் அனுப்பப்பட்டு வருகின்றன ?

கனம் திரு. கோ. பூவராகன் : இலவசமாக சுமார் 800 பிரதிகள் அனுப்பப்படுகின்றன.

திரு. வி. எஸ். எஸ். மணி : 'மெட்ராஸ் இன்பர்மேஷன்' இல் சில புகைப் படங்கள் வெளியிடுகிறார்கள். சட்ட மன்றம் கூடியிருக்கும் போதும் சில புகைப் படங்கள் எடுக்கப்படுகின்றன. அந்தப் புத்தகத்தில் பார்த்தால் அமைச்சர்கள் இருக்கும் வரிசைதான் வெளி வருகிறதே தவிர, எதிர்க் கட்சியில் இருக்கும் உறுப்பினர்களுடைய படம் வெளியிடப்படுவதே இல்லை. இது ஏன் ?

கனம் திரு. கோ. பூவராகன் : எதை முக்கியமாக எடுத்து வெளியிட வேண்டுமென்று நினைக்கிறார்களோ அதை எடுத்து வெளியிடுகிறார்கள்.

திரு. மு. கருணாநிதி : இந்த ஏடு லாபகரமாக நடைபெறுகிறதா? அப்படியானால் எவ்வளவு லாபம் வருகிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : லாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதற்காக இந்த ஏடு நடைபெறவில்லை. அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்கள், மற்றும் இருக்கும் காரியங்களை மக்களுக்குத் தெரியபடுத்த வேண்டும் என்பதற்காக இது நடைபெறுகிறது.

திரு. சி. பொன்னுசாமி : விவசாயம், கைத்தொழில் ஆகிய துறைகளைப்பற்றி வெளிநாட்டுப் பத்திரிகைகளில் நல்ல அம்சங்கள் வெளியிடப்படுகின்றன. அந்தப் பத்திரிகைகளிலிருந்து முக்கியமானவற்றை எடுத்து நமது 'சென்னைச் செய்தி' யில் வெளியிட ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. கோ. பூவராகன : விவசாயத் துறை, தொழில் துறை இன்னும் மற்ற ஒவ்வொரு துறைக்கும் தனித்தனியாக ஏடுகள் இருக்கின்றன. அவற்றில் அம்மாதிரி கூட வெளியிடுகிறார்கள்.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த ஏடு லாபகரமாக நடைபெறவில்லை என்று தெரிகிறது. ஆகவே, இதற்காகச் செலழிக்கும் பணத்தைக்கொண்டு, மற்ற பத்திரிகைகளில் அரசினருடைய காரியங்களைக் குறித்து விளம்பரம் செய்யலாம் அல்லவா ?

14th August 1963]

கனம் திரு. கோ. பூவராகன் : மற்ற பத்திரிகைகளுக்கும் விளம்பரம் கொடுக்கப்படுகிறது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : 800 பிரதிகள் இலவசமாக அனுப்பப்படுவதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார். ஒவ்வொரு நூல் நிலயத்திற்கும் இந்தப் பிரதி அனுப்பப்படுகிறதா? அப்படியில்லை யென்றால், ஒவ்வொரு நூல் நிலையத்திற்கும் இந்தப் பிரதியை அனுப்ப ஏற்பாடு செயயப்படுமா?

கனம் திரு. கோ. பூவராகன் : நூல் நிலையத்திற்கு இப்பொழுது அனுப்பப் படுவதில்லை. அதைப்பற்றியும் பரிசிலனை செய்து அனுப்பலாம் என்கிற உத்தேசம் இருக்கிறது.

திரு. செ. கோ. விசுவநாதன் : அரசாங்க அச்சகத்தில் இட நெருக்கடி அதிகமாக இருக்கிறதென்பது உண்மையா? அப்படியானால் அந்த அச்சக இடத்தை விஸ்தரிக்க உத்தேசம் உண்டா?

கனம் திரு. கோ. பூவராகன் : இதற்குத் தனிக் கேள்வி போடலாம்.

போலீஸ் காவலறையில் மரணம்.

* **147. கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையில் மே மாத முதல் வாரத்தில் போலீஸ் லாக்கப்பில் இருந்தவர் யாரேனும் மரணமடைந்தாரா?

(இ) ஆமெனில், அவர் எப்போது கைது செய்யப்பட்டார்? எப்போது மரணமடைந்தார்?

(உ) அவர் இறந்ததற்குக் காரணமென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ), (இ), (உ) 4—5—1963 அன்று காலை 11 மணி அளவில் சந்தேகத்திற்கிடமான சூழ்நிலையில் காணப்பட்டார் என்ற காரணத்தின் பேரில் எஸ். கே. பாபு என்பவர் கைது செய்யப்பட்டு போலிஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வரப்பட்டார். சிறிது நேரத்திற்குள் பாதுகாப்பு அறையிலிருந்து அவர் வாந்தி எடுக்கத் தொடங்கினார். தான் கைது செய்யப்படுவதற்கு சிறிது நேரத்திற்குமுன் அரளி விதையைத் தின்றதாக அவர் போலீசிடம் ஒப்புக்கொண்டார். உடனே போலீசார் அவரை இராயப்பேட்டை மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவருக்கு தகுந்த சிகிச்சை செய்த போதிலும், மறுநாள் 5—5—1963 அன்று அதிகாலையில் இறந்துவிட்டார். சென்னை அரசாங்க பெரிய ஆஸ்பத்திரியில் நடத்திய பிரேத பரிசோதனையின் படியும், குடல் ரசாயன சோதனையின் படியும், பாபு அரளி விதையை தின்றதின் காரணமாக இறந்திருக்கக்கூடும் என்பது தெரிந்தது.

(a) to (c) : On 4th May 1963 at about 11 a.m., an individual named S. K. Babu was arrested under suspicious circumstances, taken to the Teynampet Police Station and kept in the lock-up. Within a short while, he started vomitting in the lock-up room. He confessed to the Police that he had consumed Oleander seeds prior to his arrest. Thereupon the police immediately rushed him